தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்) செயல்முறைகள்

ந.க.எண்.019481/எம்1-இ2/2026 நாள் .06.2026

பொருள்: பள்ளிக் கல்வி – Autism மற்றும் சர்வதேச மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை பள்ளியில் சேர்த்துக் கொள்வது – தொடர்பாக

பார்வை:
1. அரசு கடிதம் எண். 2060/GL1(2)/2026-1, பள்ளிக் கல்வித் துறை, நாள் 01.04.2026.
2. சென்னை – 83, ஆட்டிசம் பாதிப்புள்ளவர்களுக்கான சிறப்பு மையம், தலைமைச் செயல் அதிகாரி அவர்களின் கடித எண். 174/CoE/B1/2026, நாள் 25.02.2026

பார்வை 1-ல் காணும் அரசு கடிதம் மூலம் பெறப்பட்ட பார்வை 2-இல் காணும் கடிதத்தில், ஆட்டிசம் பாதிப்புள்ளவர்களுக்கான சிறப்பு மையத்தின் தலைமைச் செயல் அதிகாரி, அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர் அறைக்கு முன்புள்ள பள்ளிச் சுவர்களில் பின்வரும் செய்தியைக் காட்சிப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளார்கள்.

<u>தமிழ்</u>

"அறிவுசார் குறைபாடு மற்றும் ஆட்டிச நிலைக் குழந்தைகள் இந்தப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்"

<u>English</u>

"Children with Autism and Intellectual Disability will be admitted in this school".

மேலும், அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் மேற்கண்ட செய்தியைக் காட்சிப்படுத்துமாறும், அதன் அறிக்கையை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 மற்றும் ஆட்டிசம் பாதிப்புள்ளோருக்கான சிறப்பு மையத்தின் தலைமைச் செயல் அதிகாரி, சென்னை-83 ஆகியோருக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மேற்காண் பொருள் சார்பாக அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரியப்படுத்துமாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு : கடித நகல்

இணை இயக்குநர்

பெறுநர்:
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்,
முதன்மை கல்வி அலுவலகம்